இனிமையான குழந்தைகளே! தந்தையை அனைத்தும் அறிந்தவர் என சொல்கின்றனர், ஆனால் ஒவ்வொருவரும் தம் விஷயங்களை கண்டிப்பாகச் சொல்ல வேண்டும், தன்னுடைய விசயங்களை சொல்வதால் தந்தையிடமிருந்து எச்சரிக்கை கிடைக்கும்.

கேள்வி: எல்லைக்கப்பாற்பட்ட சிருஷ்டியை சொர்க்கமாக ஆக்க வேண்டும், இதற்காக புத்திசாலி குழந்தைகளின் வேலை என்ன?

பதில்: ஒவ்வொருவரின் உண்மையான சமாச்சாரத்தை தந்தைக்குக் கொடுக்க வேண்டும். தந்தைக்குச் உண்மையான செய்தியைக் கொடுத்தால் தந்தை அறிவுரை கொடுப்பார், உனக்குள் இன்ன பூதம் உள்ளது, அதன் காரணமாக டிஸ்-சர்வீஸ் (எதிர்ப்பதமான சேவை) ஆகிறது. தனது நடத்தையை திருத்திக் கொள்ளுங்கள். தேக அபிமானத்தின் காரணமாக ஆசைகளை தியாகம் செய்யுங்கள். எல்லைக்கப்பாற்பட்ட சிருஷ்டியை சொர்க்கமாக ஆக்க வேண்டும், ஆகையால் அனைவரை குறித்தும் தந்தைக்கு இதே எண்ணம் இருக்கிறது, அனைவருக்கும் ஞானம் கொடுக்க வேண்டும், ஏழைகள் மீது குறிப்பாக கவனம் இருக்கிறது.

பாடல்: எனக்கு உதவி செய்பவர். . .

ஓம் சாந்தி. யாருக்கு வந்தனம் செய்கின்றனரோ அந்த பரமபிதா பரமாத்மாவினுடையதுதான் மகிமையாகும் என நிச்சய புத்தியுள்ள நல்ல முயற்சியாளர்கள் புரிந்து கொண்டு விடுகின்றனர். யாரெல்லாம் இருந்து சென்றனரோ அவர்களின் காரியங்களைப் பொறுத்து அவர்களின் மகிமை பாடுகின்றனர். சிலருடைய மகிமையை தெரிந்திருக் கின்றனர், சிலருடையது தெரிவதில்லை. குழந்தைகளாகிய உங்களுக்கு அனைவருடைய மகிமை பற்றியும் தெரியும். பாபா அனைத்தும் அறிந்தவர் என சொல்லப்படுகிறார், ஆனால் அனைத்தும் அறிந்தவர் என்பதன் அர்த்தத்தை குழந்தைகள் முழுமையாக புரிந்து கொள்வதில்லை. நமது உள்ளத்தில் உள்ள விஷயங்கள் தந்தைக்குத் தெரியவே செய்யும், பிறகு நாம் என்ன எழுதுவது என எவ்வளவு குழந்தைகள் நினைக் கின்றனர். ஆனால் அது தவறாகும். தந்தை ஒருவர்தான். இவ்வளவு அளவற்ற அனைத்து குழந்தை களின் எண்ணங்களை அறிவாரா என்ன! தந்தை இங்கே வருகிறார், வந்து ஆசிரியரின் ரூபத்தில் கற்பிக்கிறார். ஆக இவர்கள் எப்படி கற்கின்றனர், நிச்சய புத்தி உள்ளதா இல்லையா என்பதை புரிந்து கொள்வார். அங்கே பரம்தாமத்தில் அமர்ந்தபடி இந்த சிந்தனையை ஓட்டுகிறார் என்பதல்ல. இப்படி புரிந்து கொள்வது குழந்தைகளின் தவறு. பாபா நாங்கள் எங்களைப் பற்றிய என்ன சமாச்சாரத்தை கொடுப்பது, நீங்கள் அனைத்தும் தெரிந்திருக்கிறீர்கள் என எழுது கின்றனர். ஆனால் அப்படி அல்ல. தனது நடத்தை, படிப்பு இவற்றின் செய்தியை படிக்க வைப்பவருக்கு பிரம்மாவின் மூலம் கொடுக்க வேண்டும். போஸ்ட் ஆ்ஃபீஸ் (தபால் நிலையத்தின்) மூலம் கேட்க வேண்டும். நீங்கள் அனைத்தும் அறிவீர்கள் என்று சொல்லக்கூடாது. நாம் பாபாவிடம் இருந்து மறைந்து இருக்க முடியாது - அப்படி இல்லை. இது குருட்டு நம்பிக்கை எனப்படுகிறது. பாபாவுக்கு பிரம்மாவின் மூலம் நம்முடைய சமாச்சாரத்தை தெரியப்படுத்த வேண்டும். பல விதமான குழந்தைகள் இருக்கின்றனர் அல்லவா. ஒவ்வொருவரும் தம்முடைய

சமாச்சாரத்தை கொடுக்க வேண்டும், ஆகையால் அனைத்து செண்டர்களிலும் 12 மாதங்களாக வருபவர்களின் பதிவேடு மற்றும் அனைவருடைய தொழில் முதலியவற்றை எழுதி அனுப்புங்கள் என கேட்கிறார். ஒருவேளை பாபாவுக்குத் தெரியும் என்றால் ஏன் கேட்கப் போகிறார்? எதெல்லாம் இவருக்குத் தெரிய வேண்டுமோ அதெல்லாம் இவருக்கும் (பிரம்மாவுக்கு) தெரிந்திருக்க வேண்டும். இவர் மூலம்தான் நடக்க வேண்டும் அல்லவா. டிரங்க் கால் (தொலை தூர அழைப்பு) கூட யார் மூலமாவது இணைக்கப்படும் அல்லவா. ஆபரேட்டர் (இணைப்பை கொடுப்பவர்) விரும்பினால் கேட்க முடியும், ஆனால் தடை செய்யப்பட்டுள்ளது. விரும்பினால் கேட்க முடியும். அவர்களிடம் சப்தம் சரியாக கேட்கும். ஆக இங்கும் கூட ஒவ்வொருவரும் சமாச்சாரத்தை சொல்ல வேண்டும். இடையில் யாருக்கும் தெரியாது என்றால் பிறகு சமாச்சாரம் கொடுப்பதற்காக பி.கு. நியமிக்கப்பட்டுள்ளார். யார் ஞானத்தில் பரிபக்குவமான, நெருக்கமான குழந்தைகளாக உள்ளனரோ, அவர்களின் வேலை முழுமையான செய்தி கொடுப்பது. ஒவ்வொருவரும் காரியாலயத்தின் செய்தியை கொடுக்க வேண்டும். புத்திசாலி குழந்தைகள் எழுதவும் செய்கின்றனர். பாபா பிறகு அறிவுரை கொடுப்பார். இல்லாவிட்டால் நடத்தை சீர் திருந்தாது. முழுமையாக குணங்களை தாரணை செய்வதில்லை. தேக அபிமானம் நிறைய இருக்கிறது. தேக அகங்காரத்தினால் இச்சைகள் (ஆசைகள்) நிறைய இருக்கின்றன. புத்திசாலி குழந்தைகள் சட்டென செய்தி கொடுக்கின்றனர் - இன்ன இன்ன காரணங்களால் டிஸ்-சர்வீஸ் (எதிர்ப்பதமான சேவை) ஏற்படுகிறது. இது பூதமாகும், இதனை வெளியேற்றுங்கள், இல்லா விட்டால் பதவி கீழானதாக ஆகிவிடும் என பாபா எச்சரிக்கை கொடுப்பார்.

பாபா எல்லைக்கப்பாற்பட்ட சிருஷ்டியை சொர்க்கமாக ஆக்குபவர், இவர்களை மேலே உயர்த்துவோம் என்ற நோக்கம் அனைவர் மீதும் பாபாவுக்கு உள்ளது. ஏழைகள் மீது குறிப்பாக அதிகமான கவனம் இருந்து கொண்டிருக்கிறது. எப்போதும் ஏழைகளுக்கு தானம் கொடுக்கப் படுகிறது. ஏழைகள்தான் நிமித்தமாக ஆகியுள்ளனர். இராஜ்யம் ஸ்தாபனை ஆகிக் கொண்டிருக் கிறது. பிரஜைகள் நிறைய இருப்பார்கள். பிரிட்டிஷ் அரசாங்கம் இருந்தபோது இருந்த பரோடா, குவாலியர் முதலான இடங்களின் ராஜாக்கள் - ஒரு ராஜா, ராணி, மந்திரி மற்றபடி பிரஜைகள் இருந்தனர். சிலருக்கு 20 லட்சம் பிரஜைகள் இருந்தனர், சிலருக்கு 30 லட்சம்... வரிசைக் கிரமமாக இருந்தனர். ஆக, தர்பாரில் அனைத்து ராஜாக்களையும் அழைப்பதுண்டு. தர்பாரும் வரிசைக் கிரமமாக அமர்ந்து கொண்டிருக்கும். அதாவது மகாராஜாக்களின் வரிசை தனியாக, ராஜாக்களின் வரிசை தனியாக, ராய் பகதூர், ராய் சாஹேப் முதலான பட்டங்களை உடையவர்கள் என வரிசைக் கிரமமாக இருப்பார்கள். இதுவும் அவ்வாறுதான். உயர்ந்தவரிலும் உயர்ந்தவர் தந்தை, அவருக்கு அனைவரும் மரியாதை கொடுக்க வேண்டும். தந்தைதான் வந்து ஒவ்வொரு கல்பத்திலும் பாரதத்தை சொர்க்கமாக ஆக்குகிறார். பாரதவாசிகள் தந்தையை நிந்திக்கத் தொடங்குகின்றனர். சதோபிரதானத்திலிருந்து சதோ, ரஜோ, தமோவில் கண்டிப்பாக இறங்கி வரத்தான் வேண்டும். ஆக, உயர்ந்தவரிலும் உயர்ந்தவர் பகவான் பிறகு அவருடன் தொடர்பு கொண்டவர்கள் பிரம்மா, விஷ்ணு, சங்கரராகிய சூட்சும வதனவாசிகள் ஆவர். மரத்தைப் பற்றி தெரிந்திருக்க வேண்டும் அல்லவா. தந்தையைத்தான் இந்த மரத்தைப் பற்றிய ஞானம் நிறைந்தவர் என சொல்லப்படுகிறது. வேறு யாருக்குள்ளும் ஞானம் இல்லை.

ஆக உயர்ந்தவரிலும் உயர்ந்த தந்தை, பிறகு பிரம்மா, விஷ்ணு, சங்கரர், பின்னர் பிரஜாபிதா பிரம்மா மற்றும் ஜகதம்பா தாய் தந்தையென புகழ் பெற்றவர்கள். ஜகதம்பா சரஸ்வதி பிரம்மாவின் புதல்வி ஆவார். அவருக்கும் கூட ஒரு பெயர் இருக்க வேண்டும். சிலர் அம்பா என சொல்கின்றனர், சிலர் காளி என்கின்றனர், சிலர் சரஸ்வதி என சொல்கின்றனர். பல பெயர்கள் வைக்கப்பட்டுள்ளன. இவர் பிரஜாபிதா பிரம்மா மற்றும் பிறகு பி.கு. சரஸ்வதி. சரஸ்வதியிடம் வீணை இருப்பதாக காட்டவும் செய்கின்றனர். முதன் முதலில் முக்கிய மானவர் ஞானத்தின் இறைவி. எப்படி இவருக்கு ஞானத்தின் முரளி (புல்லாங்குழல்) கொடுக்கப் பட்டுள்ளதோ அதுபோல் அவருக்கு வீணை கொடுக்கப்பட்டுள்ளது. முதன் முதலில் முக்கிய மானவர் ஞானத்தின் இறைவி, ஜகதம்பா ஆவார். எந்த ஞானம்? இராஜயோகத்தின் ஞானம். இவருக்கு யார் கொடுத்தது? ஞானக்கடல். ஞானக்கடல் தந்தையிடம் இந்த பிரம்மா கற்றார் எனும்போது குழந்தைகளும் கற்றனர். அவர் பிறகு ஞான-ஞானேஸ்வரியிலிருந்து ராஜ-ராஜேஸ்வரியாக ஆகிறார். ததத்வம் (நானே அது). பிரம்மா மற்றும் சரஸ்வதி. இருவரும் ஞான-ஞானேஸ்வரியாக ஆகினர். ஈஸ்வரனிடம் சகஜ இராஜயோகத்தின் ஞானத்தைப் பெற்று இராஜ்யத்தை அடைந்தனர். ததத்வம். லட்சுமி-நாராயணர் மட்டும் இருக்க மாட்டார்கள். இந்த இராஜ்யம் ஸ்தாபனை ஆகிக் கொண்டிருக்கிறது. எவ்வளவு பிராமண-பிராமணியர் இருக்கின்றனர், படித்துக் கொண்டிருக் கின்றனர், அவர்கள் பிறகு பூஜைக்குரிய ராஜா ராணி ஆகப் போகின்றனர். பிறகு சதோபிரதானத்திலிருந்து சதோவில் வரும்போது இரண்டு கலைகள் குறைந்திட பின்னர் ரஜோ தமோவில் வந்து பூஜைக்குரியவரிலிருந்து பூஜாரி ஆகி விடுகின்றனர். நாமேதான் பூஜைக்குரியவராக இருந்தோம், நாமே தான் பூஜாரியாக ஆகியுள்ளோம். இதனை பரமாத்மா விற்காக பாட மாட்டார்கள். அவர் எப்படி பூஜாரியாக ஆவார். நாம் தான் ரஜோ தமோவில் வந்து பூஜாரியாக ஆகியுள்ளோம். பாபா புரிய வைத்துள்ளார் - உண்மையில் தர்ம சாஸ்திரங்கள் நான்கு தான், முக்கியமானது ஸ்ரீமத் பகவத்கீதை, தாய் தந்தை போன்றது. மற்றவைகள் அதனுடைய குழந்தைகளாக இஸ்லா மியர்கள், பௌத்தர்கள் முதலான தர்மத்தினுடையவை. உயர்ந்ததிலும் உயர்ந்தது கீதை, பிறகு இஸ்லாமியர்களின் சாஸ்திரம். தர்மத்தின் ஸ்தாபனைக்கான முக்கிய சாஸ்திரங்கள் இவை. முதன் முதலானது தேவி தேவதா தர்மம், அதனுடைய சாஸ்திரம் கீதையாகும். அதனை உரைத்தவர் பரமபிதா பரமாத்மா ஆவார். அவர் தான் ஞானக் கடல். நிச்சயமாக அவரைத்தான் உயர்வாக வைக்க வேண்டும். மற்றவர்கள் சகோதரர்கள். தேவி, தேவதாக்கள் மூத்தவர்கள் (முக்கியமானவர்கள்) அதன் பிறகு இஸ்லாமியர், பௌத்த சகோதரர் கள். உயர்ந்ததிலும் உயர்ந்தவர் தந்தை ஆவார். மத சம்மந்த மாநாடுகளில் உயர்ந்ததிலும் உயர்ந்த வர்தான் வேண்டும். அந்த தர்மம் மறைந்து விட்டது, மீண்டும் ஸ்தாபனை ஆகிறது. ஸ்தாபனை செய்பவர் பரமபிதா பரமாத்மா ஆவார். அவரோ நிராகாரமாக இருப்பவர். ஆம், பிரம்மாவின் மூலம் செய்து கொண்டிருக்கிறார். பரமபிதா பரமாத்மா பிரம்மாவின் மூலம் பிராமணர்களைப் படைத்தார் என பாடவும் பட்டுள்ளது. கிருஷ்ணர் பிரம்மாவின் மூலம் பிராமணர்களைப் படைத்தார் என சொல்ல மாட்டோம். பரமபிதா பரமாத்மா பிரம்மாவின் வாய் மூலம் பிராமணர் களைப் படைத்தார், பிறகு அதே பிராமணர்கள் சூரியவம்சத்தவராகவும் சந்திரவம்சத்தவராகவும் ஆகின்றனர். ஆக, சூரியவம்சத்தின், சந்திரவம்சத்தின் ஸ்தாபனை ஆகிக் கொண்டிருக்கிறது. நீங்கள் தேவி தேவதா தர்மத்தின் சமூகத்தவர்கள் ஆவீர்கள். நமக்குப் பிறகு

இரண்டாவது எண்ணிக்கையில் இஸ்லாமிய சமூகத்தவர்களுடையது இருக்கும், பிறகு பௌத்தர்களுடையது இருக்கும். இப்படி வளர்ச்சி யடையும். இவையனைத்தும் புத்தியில் தாரணை ஆக வேண்டும். யார் கடந்த காலத்தில் இருந்து சென்றனரோ அவர்களுடைய சாஸ்திரங்களை உருவாக்குகின்றனர். இப்போது என்னென்ன நடக்கிறதோ அவையனைத்தும் படப்பிடிப்பு போல பதிவாகியபடி இருக்கிறது. கல்பத்திற்குப் பிறகு மீண்டும் நடக்கப் போகிறது. முழு உலகின் நடவடிக்கைகளும் படம் பிடிக்கப்பட்டுக் கொண்டிருக்கி றது. 5 ஆயிரம் வருடங்களுக்குப் பிறகு உங்களுடைய இந்த நடிப்பு மீண்டும் நடக்கும். இவை மிகவும் புரிந்து கொள்ள வேண்டிய விஷயங்களாகும். ஆக உயந்தவரிலும் உயர்ந்தவர் சிவபாபா, பிறகு ஜகதம்பா, பிரஜாபிதா மற்றும் அவருடைய குழந்தைகள். 3 சகோதரர்கள் இருக்கின்றனர், மற்றபடி பெரிய சகோதரனான தேவி தேவதா தர்மம் இல்லை. மறைந்து விட்டிருக்கிறது. இல்லாமல் போகும்போது இந்த தர்மம் கண்டிப்பாக மீண்டும் ஸ்தாபனை ஆகி மற்ற அனைத்தும் முடிந்து போய் விடும். தேவி தேவதா தர்மம் இருக்கும்போது மற்ற சகோதரர்கள் (தர்மங்கள்) இருப்பதில்லை. பிற்காலத்தில் அவர்கள் வருவார்கள். தந்தை ஒருவரே மற்றும் படைப்பும் ஒன்றே ஆகும். நான் மீண்டும் இராஜயோகத்தை கற்பிக்க வந்திருக்கிறேன் என தந்தை சொல்கிறார். வினாசத்திற்காக இந்த மகாபாரதச் சண்டையும் நடந்து கொண்டிருக்கிறது என நீங்கள் அறிவீர்கள்.

குழந்தைகளாகிய நீங்கள் நாடகத்தை நல்ல முறையில் அறிந்திருக்கிறீர்கள். இவையனைத்தும் படிப்பின் விஷயங்கள் ஆகும். இங்கே திருடர்கள் வந்து தங்கம் முதலானவற்றை திருடிச் செல்லும்படியான பொருட்கள் ஏதுமில்லை. இது பாடசாலையாகும். பாடசாலையில் புத்தகங்கள், வரைப் படங்கள் முதலானவைதான் இருக்கும். இதுவும் பாடசாலைதான் ஆகும். இவை வரைப் படங்கள் ஆகும். பயப்பட வேண்டிய விஷயம் எதுவும் இல்லை. திருடர்கள் என்ன செய்வார்கள்! எந்த பொருளும் இல்லை. மற்றபடி சிலருடையது மண்ணோடு மண்ணாகும்...... .என்பது பாடப் பட்டுள்ளது. எவ்வளவுதான் இலட்சாதிபதிகளாக, கோடீஸ்வரர்களாக, பல மில்லியன் களின் அதிபதிகளாக இருந்தாலும் எல்லா செல்வங்களும் சாம்பலாகப் போகின்றன. உங்களுடையது உண்மையான வருமானம் ஆகும். நீங்கள் அனைவரை விடவும் பல மில்லியன்களின் அதிபதிகள் ஆவீர்கள். நீங்கள் இந்த வருமானத்தை உடன் எடுத்துச் செல்வீர்கள். நாம் அனைத்தையும் சொர்க்கத்திற்கு இடமாற்றம் செய்கிறோம் என நீங்கள் அறிவீர்கள். பாபா, எங்களுக்கு சொர்க்கத்தில் கொடுக்க வேண்டும் என பாபாவிடம் சொல்கின்றனர். வட்டியுடன் சேர்த்து சோழிக்குப் பதிலாக வைரத்தைக் கொடுக்க வேண்டும். எவ்வளவு புரிந்து கொள்ள வேண்டிய வி'யங்கள். அதுவும் ஸ்ரீமத்படி நடக்க வேண்டும். இல்லற விஷயங்களையும் கவனிக்க வேண்டும், ஆனால் ஸ்ரீமத் (உயர்ந்த வழி) படி நடக்க வேண்டும். மனிதர்கள் நிறைய செலவு செய்கின்றனர். கடன் வாங்கியாவது தீர்த்த யாத்திரை செல்கின்றனர். அவையனைத்தும் பக்தி மார்க்கத்தின் விசயங்களாகும். இவை யனைத்தும் கூட அனாதியானதாகும். கீழான நிலைக்கு வர வைப்பதற்கும் விசயங்கள் தேவை அல்லவா. தமோபிரதானத்திலும் செல்லவே வேண்டும், அப்போதுதானே நான் வந்து நீங்கள் இவ்வளவு நிந்தனை செய்தீர்கள், ஆகையால் துர்க்கதியை அடைந்தீர்கள் என புரிய வைப்பேன். ஒவ்வொரு கல்பமும் நடந்து கொண்டது போல்தான் மீண்டும் நடந்து

கொள்வார்கள். ஞானம் மற்றும் பக்தி. முழுமையாக துர்க்கதியை அடையும் போது அனைவரின் சத்கதிக்காக தந்தை வர வேண்டியுள்ளது. இந்த ஜபம் முதலானவைகளை செய்து செய்து கலைகள் குறைந்தபடி செல்கின்றன. முற்றிலும் கருப்பாகி விடுகின்றனர், பின்னர் இரவுக்குப் பிறகு பகல் வருகிறது. இந்த முழு நாடகமும் புத்தியில் இருக்க வேண்டும். மனிதர்கள் ஞானத்தை எடுப்பதில்லை, ஆனால் வெறுமனே பார்த்து விட்டு ஆஹா ஆஹா என சொல்கின்றனர். வெளியில் சென்றால் அவ்வளவுதான், முடிந்தது. இவ்வளவு கண்காட்சிகள் நடந்தன, ஒருவர் கூட நிச்சயபுத்தியாக ஆகவில்லை. புரிந்து கொள்வதற்காக வருகின்றனர், ஆனால் நிச்சயபுத்தியுள்ளவர் ஒருவர் கூட இல்லை. மாயை முழுமையான நம்பிக்கை கொள்ள விடுவதில்லை. பந்தனத்திலிருக்கும் கோபி கைகள் (கன்யாக்கள்) வீட்டில் அமர்ந்தபடி எழுதுகின்றனர் - பாபா நாங்கள் உங்களுடையவர்களாக ஆகி விட்டோம். உங்களை அறிந்து கொண்டு விட்டோம். நாங்கள் உங்களுடையவர்களேதான். இறந்தாலும் ஒருபோதும் திருமணம் செய்து கொள்ள மாட்டேன். பந்தனம் இருப்பதால் வர முடியவில்லை. கொஞ்சம் மனதில் பட்டவுடனேயே எப்படி வெளிப்படுகின்றனர். இன்னும் சிலரிடமோ 10 - 20 வருடங்களுக்கு மண்டையை உடைத்துக் கொண்டாலும் புரிந்து கொள்வதே இல்லை. பாபா 21 பிறவிகளுக்கு உயிர்தானம் கொடுக்கிறார். காலனின் மீது வெற்றி அடையச் செய்கிறார். அங்கே அகால (திடீர்) மரணம் ஒரு போதும் ஏற்படுவதில்லை. ஆக, எவ்வளவு தந்தையின் ஸ்ரீமத்படி நடக்க வேண்டும், தானம் கொடுக்க வேண்டும். மற்றவர்களின் வாழ்க்கையைக் கூட வைரத்திற்குச் சமமாக ஆக்க வேண்டும். அவரவர்களுடைய அதிர்ஷ்டம் இருக்கவே செய்கிறது, ஆயினும் முரளியை கண்டிப்பாகப் படிக்க வேண்டும். முரளி எங்கே வேண்டு மானாலும் கிடைக்கும். ஒரு நாள் பல மொழிகளில் முரளி வெளி வரப்போகிறது. நல்லது!

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமான பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் காலை வணக்கமும். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. தனது முன்னேற்றத்திற்காக தன்னுடைய நடத்தை மற்றும் படிப்பின் உண்மையிலும் உண்மையான செய்தியை தந்தைக்குக் கொடுக்க வேண்டும். தனது மற்றும் அனைவரின் வாழ்க்கையை வைரத்திற்குச் சமமாக ஆக்க வேண்டும்.

2. இல்லற விஷயங்களை கவனித்தபடி ஸ்ரீமத்படி முழுமையாக நடக்க வேண்டும். புத்திசாலிகளாகி தமது அனைத்தையும் சொர்க்கத்திற்கு இடமாற்றம் செய்து விட வேண்டும்.

வரதானம் : பாபாவின் குடைநிழலுக்கு கீழ் சதா பாதுகாப்பின் அனுபவம் செய்யக்கூடிய

அனைத்து ஈர்ப்பிலிருந்து விடுபட்டவர் ஆகுக.

ஸ்தூலமான உலகத்தில் வெயில் மற்றும் மழையிலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்காக குடையின் நிழலை ஆதாரமாக எடுக்கிறோம். அது ஸ்தூலமான குடையாகும். மேலும் இது பாபாவின் குடைநிழலாகும். இது ஆத்மாவை ஒவ்வொரு நேரமும் பாதுகாப்பாக

வைக்கிறது. அவர்களை எந்தவித கவர்ச்சியும் தன் பக்கம் கவர்ந்திழுக்காது. மனதார பாபா என்று கூறினால் பாதுகாப்பாக இருந்துவிடலாம். எப்படிப்பட்ட சூழ்நிலையாக இருந்தாலும், குடைநிழலுக்குள் இருக்கக்கூடியவர்கள் எப்பொழுதும் பாதுகாப்பை அனுபவம் செய்ய முடியும். மாயாவின் தாக்கத்தின் அழுத்தம் வராது.

சுலோகன்: சுயராஜ்ய அதிகாரி ஆகிவிட்டால் அடிமைத்தன்மை முடிந்துபோய்விடும்.